25.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காய்கறி விலை கிடு கிடு உயர்வு

கோடை வெயிலால் வரத்து குறைந்ததையொட்டி காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் கோடை வெயில் கடுமையாக உள்ளது. இதையொட்டி காய்கறி வரத்து குறைந்தது.

திருவள்ளூர், சுற்றியுள்ள கிராமங்களில் விளைவிக்கப்படும் காய்கறிகள் வில்லிவாக்கம் மார்க்கெட், கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கொண்டு சென்று விவசாயிகள் விற்று விடுகின்றனர். இதனால் திருவள்ளூர் மார்க்கெட்டுக்கு பெரும்பாலும் கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து காய்கறிகள் வரவழைக்கப்படுகின்றன. இதனால் கோயம்பேட்டுக்கு வரத்து குறைவாக இருந்ததால் திருவள்ளூரிலும் காய்கறிகள் கூடுதல் விலையில் விற்கப்படுகின்றன.

செவ்வாய்க்கிழமை காய்கறிகள் விலை நிலவரம்: வெங்காயம் கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை. தக்காளி ரூ. 60 முதல் 80 வரையில் விற்கப்பட்டன. மேலும் பீன்ஸ் கிலோ ரூ. 100, அவரை ரூ. 120, கேரட் ரூ.50, பீட்ரூட் ரூ.40, மாங்காய் ரூ.20, கோஸ் ரூ.30, சேனைக் கிழங்கு ரூ. 50, உருளை ரூ.30, கருணை ரூ.60, முருங்கை ரூ.50, கத்தரி ரூ.30, முள்ளங்கி ரூ.30, வெண்டை ரூ. 40, இஞ்சி ரூ. 60 என விற்கப்படுகின்றன.

**உடுமலை, அமராவதி வனங்களில் வன விலங்கு கணக்கெடுப்புப் பணி**

உடுமலை மற்றும் அமராவதி வனச் சரகங்களில் வன விலங்குகள் கணக்கெடுப்புப் பணி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

ஆனைமலை புலிகள் காப்பகம் 958 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. இதில், 447 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட உடுமலை மற்றும் அமராவதி வனச் சரகங்களில் புலி, சிறுத்தைப் புலி, யானை, மான், காட்டெறுமை, செந்நாய் உள்ளிட்ட பல்வேறு அரிய வகை விலங்கினங்கள் உள்ளன.

இந்நிலையில், இந்த இரு வனச் சரகங்களிலும் வன விலங்குகள் கணக்கெடுப்புப் பணிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுவது வழக்கம். இதன்படி இந்த இரு வனச் சரகங்களில் மே 24ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை வன விலங்குகள் கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற உள்ளன.

இந்நிலையில், உடுமலை மற்றும் அமராவதி வன சரகங்களில் 34 குழுக்கள் இந்தப் பணிகளை செவ்வாய்க்கிழமை மேற்கொண்டன. ஒரு குழுவுக்கு ஒரு வன ஊழியர், ஒரு வேட்டை தடுப்புக் காவலர், ஒரு தன்னார்வலர் உள்ளிட்டோர் இந்தப் பணிகளை கவனித்து வருகின்றனர். ஒரு நாளைக்கு 4 கிலோ மீட்டர் சுற்றளவுக்குப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வன விலங்குகளின் கால்தடம், நகங்கள் பதிவு மற்றும் எச்சம் ஆகியவற்றை வைத்து இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதை ஒட்டி கணக்கெடுப்பாளர்களுக்கு ஏற்கெனவே பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. திருப்பூர் மாவட்ட வன அலுவலர் அ.பெரியசாமி, உடுமலை வனச் சரகர் சுப்பையன், அமராவதி வனச் சரகர் தங்கராஜ் பன்னீர்செல்வம் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

## 30 அடியாக உயர்ந்தது: அமராவதி அணை நீர்மட்டம்

உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 30 அடியைத் தாண்டியுள்ளது.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் வரையில் மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும் நூற்றுக்கணக் கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்கள் தொடர்ந்து பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர் சென்று கொண்டிருந்த நிலையில் அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது. மேலும், இந்த ஆண்டு கோடை தொடக்கத்தில் இருந்தே அணையின் நீர்மட்டம் வெறும் 10 அடியே நீர் இருப்பு இருந்தது. இதனால் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் இருந்தது.

இதற்கிடையில் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான பாம்பாறு, சின்னாறு, தேனாறு ஆகிய மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது. தற்போது குடிநீர்த் தேவைகளை ஓரளவு சமாளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அணை நிலவரம்: 90 அடி உயரம் கொண்ட அணையில் செவ்வாய்க்கிழமை காலை 7 மணி நிலவரப்படி நீர்மட்டம் 30.68 அடியாக இருந்தது.

அப்போது அணைக்கு உள்வரத்தாக 49 கன அடி வந்து கொண்டிருந்தது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 418.49 மில்லியன் கனஅடி நீர் இருப்பு இருந்தது. அணையில் இருந்து 10 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. மழைப் பொழிவு இல்லை.

## தமிழ்நாட்டில் விளையும் உணவுப் பண்டங்களுக்கு மட்டுமே உணவு மானியம் வழங்கக் கோரிக்கை

தமிழ்நாட்டில் விளையும் உணவுப் பண்டங்களுக்கு மட்டுமே மானியம் வழங்க வேண்டுமென கீழ் பவானி விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

இது குறித்து கீழ்பவானி விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் செயலாளர் செ.நல்லசாமி விடுத்துள்ள செய்திக் குறிப்பு: 7-ஆவது சம்பள கமிஷன் பரிந்துரையையும், விவசாய கமிஷன் பரிந்துரையையும் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்திட வேண்டும். அதுவரை 7-ஆவது சம்பள கமிஷன் பரிந்துரையை கிடப்பில் போடவேண்டும்.

உள்நாட்டில், குறிப்பாக தமிழகத்தில் விளையும் உணவுப் பண்டங்களுக்கு மட்டுமே உணவு மானியம் கொடுத்து, பங்கீட்டுக் கடைகளில் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும். இறக்குமதி செய்யப்படும் பாமாயில், பருப்பு போன்ற வெளிநாட்டுப் பண்டங்களுக்கு உணவு மானியம் வழங்கக் கூடாது.

அரசு விதிமுறைகளுக்கும், காவிரி இறுதித் தீர்ப்புக்கும் புறம்பாக பவானிசாகர் அணை நீர் நிர்வாகம் நடந்து கொள்கிறது. எனவே, புதிய அரசு அதற்கான தீர்வு காண வேண்டும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மலர்க் கண்காட்சியில் இடம் பெறும் குன்னூர் ராணுவப் பூங்கா மலர்கள்

உதகையில் நடைபெறும் மலர்க் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக குன்னூர் ராணுவ முகாம் பூங்கா மற்றும் தனியார் பூங்காக்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் தயாராகி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி நிறைவு பெற்ற நிலையில், வரும் 27-ஆம் தேதியில் இருந்து 29-ஆம் தேதி வரை உதகை தாவரவியல் பூங்காவில் மலர்க் கண்காட்சி நடைபெறுகிறது.

இந்தக் கண்காட்சியில், தனியார் விடுதி மற்றும் மத்திய அரசு விடுதி, அலுவலக பூங்காக்கள், தனியார் பூங்காக்கள், பள்ளி பூங்காக்கள் என பல்வேறு பிரிவுகளின் கீழ் பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட உள்ளன.

இதற்காக குன்னூரில் உள்ள ராணுவ பயிற்சி கல்லூரி பூங்காவில் மேரிகோல்டு, ரோஜா, டேலியா, பெட்டோனியா, சால்வியா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வகையிலான பல வண்ண மலர்கள் பூத்து குலுங்கும் அளவுக்கு தயார்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று பள்ளி, கல்லூரிகளிலும், தனியார் விடுதிகளிலும் பல்வேறு வண்ணங்களில் பூக்கள் தொட்டிகளில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட சில வகை மலர்கள் வெளிநாடுகளில் இருந்தும் வரவழைக்கப்பட்டுள்ளன.

இதனை தற்போது ஆய்வுக் குழுவினர் ஆய்வு செய்து வருகின்றனர். வரும் ஞாயிற்றுக்கிழமை மலர்க் கண்காட்சி நிறைவு விழாவில், முதல் 3 இடங்களை பிடிக்கும் சிறந்த பூங்காக்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

## கிரியேட் இயற்கை வேளாண் பண்ணையில் ஜூன் 4, 5-இல் தேசிய அளவிலான நெல் திருவிழா

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பண்ணையில் ஜூன் 4, 5 ஆம் தேதிகளில் தேசிய அளவிலான நெல் திருவிழா நடைபெறுகிறது.

கடந்த 2006 இல் வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் இத்திருவிழாவை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து 10 ஆவது ஆண்டாக தேசிய அளவில் நெல் திருவிழா ஜூன் 4, 5 ஆம் தேதிகளில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் நினைவரங்கில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு, திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மார்கண்டன் தலைமை வகிக்கிறார்.

கிரியேட் அமைப்பு தலைவர் துரைசிங்கம், மேலாண்மை அறங்காவலர் பொன்னம்பலம், தமிழக இயற்கை உழவர் இயக்க மாநில தலைவர் சிக்கல் அ. அம்பலவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மு. ராமசாமி, நபார்டு முதன்மை பொது மேலாளர் நாகூர் அலி ஜின்னா, தமிழ்நாடு வேளாண்துறை இயக்குநர் ஆ. ராஜேந்திரன், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்கின்றனர்.

இதில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஒடிஸா, மேற்கு வங்காளம், ஆந்திரம், தெலங்கானா மாநிலங்களைச் சேர்ந்த முன்னணி வேளாண் வல்லுநர்கள், விவசாயிகள் பங்கேற்கின்றனர்.

மேலும், நபார்டு உழவர் மன்ற உறுப்பினர்கள் புதுவாழ்வுத் திட்ட உறுப்பினர்கள், வேளாண் துறையின் அட்மா திட்ட உறுப்பினர்கள், மத்திய, மாநில அரசு அதிகாரிகள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், சவால்கள், நிலம்-நீர் நிலைகளைப் பாதுகாத்தல், உற்பத்தியாளர் நிறுவனத்தைத் தொடங்க வேண்டியதன் அவசியம், பாரம்பரிய நெல் சாகுபடி, உழவர்களுக்கான நபார்டு திட்டங்கள், இயற்கை உழவர் வேளாண் சான்று பெறும் முறை குறித்து விவாதிக்கப்படுகிறது. சிறந்த விவசாயிகள், சமூக ஆர்வலர்களுக்கு என 10 நபர்களுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்படுகிறது. இயற்கைச் சீற்றங்களைத் தாங்கி வளரும் 156 பாரம்பரிய நெல் விதைகள் 6 ஆயிரம் விவசாயிகளுக்கு தலா 2 கிலோ வீதம் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதில் பங்கேற்க விரும்புவோர், நெல் ஜெயராமன், மாநில ஒருங்கிணைப்பாளர், நமது நெல்லைக் காப்போம் பெருமாள் கோயில் தெரு, ஆதிரெங்கம், கட்டிமேடு, திருத்துறைப்பூண்டி 614716, திருவாரூர் மாவட்டம் என்ற முகவரியில், அஞ்சல் மூலம் பதிவு செய்துகொள்ளலாம்.

கூடுதல் விவரங்களுக்கு 94433 20954, 94878 30954, 04369-220954 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று நமது நெல்லைக்

காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

## முடிவடைந்தது பராமரிப்புப் பணி: பாபநாசம் அணை திறப்பு

பாபநாசம் அணையில் பராமரிப்புப் பணிகள் முடிவடைந்ததையடுத்து, அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக செவ்வாய்க்கிழமை 100 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அணை மூடப்பட்டு, குடிநீர்த் தேவைக்கு மணிமுத்தாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

அணையில் பராமரிப்புப் பணிகள் முடிவடைந்ததை அடுத்து குடிநீர்த் தேவைக்காக செவ்வாய்க்கிழமை காலை 104.75 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன. மணிமுத்தாறு அணையில் இருந்து 300 கனஅடி திறந்து விடப்பட்டுள்ளது.

நீர்மட்டம் நிலவரம்: பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 58.45 கனஅடி, மணிமுத்தாறு அணை, கடனாநதி அணைகளுக்கு தலா 8 கனஅடி நீர்வரத்து இருந்தது. பிற அணைகளுக்கு நீர்வரத்து இல்லை.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 61.35 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 74.41 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 78.39 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 29 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 25 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 24.94 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் 11.80 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 42 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 24.15 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 12.93 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 2.50 அடியாக இருந்தது.

Dhinamalar

தினகரன்

# இன்றைய வேளாண் செய்திகள்

## முக்கொம்பு கதவணையில் தண்ணீர் திறப்பு

ஜீயபுரம் : திருச்சி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக முக்கொம்பு கதவணையிலிருந்து 50 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. மேட்டூர் அனையில் நீர் மட்டம் 47 அடியாக இருந்து வரும் நிலையில் அங்கிருந்து 485 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. கடந்த வாரம் கரூர் மாவட்டத்தில் பெய்த மழையால் காவிரியில் வெளியேறிய மழைநீர் மற்றும் மேட்டூரிலிருந்து வெளியேறி வரும் தண்ணீர் திருச்சி மாவட்டம் முக்கொம்பு கதவணையில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் திருச்சி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காகவும், திருச்சி மாவட்டத்திற்குட்பட்ட காவிரி ஆற்றுப் பகுதியிலிருந்து காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட குழாய் நீரேற்று நிலையங்கள் மூலம் வெளி மாவட்டங்களுக்கு குடிநீர் செல்லும் வகையிலும் முக்கொம்பு கதவனையிலிருந்து 50 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## தேங்காய் விலை வீழ்ச்சியிலிருந்து தப்பிக்க கொப்பரை தயார் செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

பட்டுக்கோட்டை : தஞ்சை மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் உதயகுமார், பட்டுக்கோட்டை வேளாண் வணிக அலுவலர் மாலதி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை: தற்போது தேங்காய் விலை மிகவும் சரிந்து காணப்படும் நிலையில் அனைத்து விவசாயிகளும் எளிதில் தயாரிக்கக்கூடிய முக்கிய மதிப்பூட்டிய பொருள் கொப்பரையாகும். இந்தாண்டு கோடை வெப்பம் உக்கிரம்

அடைந்திருக்கும் நிலையில் இவ்வெயிலை பயன்படுத்தி தென்னை விவசாயிகள் அனைவரும் கொப்பரை தயார் செய்யலாம். மிதமான வெயிலில் கொப்பரை தயார் செய்ய 8 முதல் 10 நாட்களாகும். ஆனால் இந்தாண்டு கோடை வெப்பத்தில் 4 முதல் 5 நாட்களிலேயே கொப்பரை தயார் செய்துவிட முடியும்.

நன்கு முற்றிய தேங்காய்களை 50 நாட்கள் இடைவெளிக்கு மேலாக அறுவடை செய்து அதிலிருந்து கொப்பரை தயார் செய்யும்போது நல்ல தரமான கொப்பரை கிடைக்கும். தேங்காயை உடைத்து காயவைத்து நீர் வற்றியவுடன் தேங்காய் ஓட்டிலிருந்து உடனடியாக கொப்பரையை பிரித்தெடுக்க வேண்டும். அவ்வாறு ஓட்டிலிருந்து பிரித்து எடுத்தவுடன் ஒரு தேங்காயிலிருந்து கிடைக்கும் 2 கொப்பரை மூடிகளை மேலும் துண்டாக்கி வெட்டாமல் அப்படியே வெயிலில் காயவைத்து 6 சத ஈரப்பதத்துக்கு கொண்டுவர வேண்டும்.

அதாவது ஒரு மூடி கொப்பரையை எடுத்து உள்ளங்கையில் வைத்து நெறிக்கும்போது கொப்பரை வளையாமல் நறுநறுவென்ற சத்தம் கேட்க வேண்டும். அந்த மாதிரியான கொப்பரை தான் நீண்ட நாட்கள் கெட்டு போகாமல் இருக்கும். அவ்வாறு 6 சத ஈரப்பதத்துக்குள் இருந்தால் மட்டுமே முதல்தர கொப்பரைக்குரிய விலையை பெற முடியும். மேலும் கொப்பரை தயார் செய்யும்போது மண், தூசி, தேங்காய் நார் போன்ற பொருட்கள் சேராமல் பூஞ்சானம் தாக்காமல் முழுவடிவ கொப்பரையாய் தயார் செய்தால் அதற்கு முதல்தர விலை கிடைக்கும்.

கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வரும்போது முதல் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என தரம் பிரித்து கொண்டு வந்தால் தரத்துக்கேற்ற விலையை பெற்று கூடுதல் விலை பெற்று நஷ்டத்தை தவிர்க்க முடியும். சாதாரணமாக 8 தேங்காயிலிருந்து ஒரு கிலோ கொப்பரை தயார் செய்ய முடியும். தற்சமயம் கொப்பரை கிலோ ஒன்று 52 முதல் 53 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேநேரம் தேங்காய் விலை காய் ஒன்றுக்கு ரூ.4.50 முதல் ரூ.5 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

8 தேங்காயை அப்படியே விற்றால் ரூ.36 முதல் ரூ.40க்கு விற்கலாம். மேலும் விவசாயிகளுக்கு லாபக்காய் மூலமும் இழப்பு ஏற்படும். அதேநேரம் கொப்பரையாக மாற்றும்போது ஆள் கூலி, உழைப்பு என்ற செலவினங்கள்போக 8 தேங்காய் மூலம் 8 முதல் 10 ரூபாய் லாபம் கிடைக்கும். அதாவது ஒரு தேங்காய்க்கு ரூ.1 கூடுதலாக கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு தயார் செய்யப்படும் கொப்பரையை பட்டுக்கோட்டை வளவன்புரம் வெண்டாகோட்டை சாலையில் உள்ள தென்னை வணிக வளாகத்துக்கு புதன்கிழமை தோறும் நடைபெறும் கொள்முதல் நாளன்று கொண்டு வந்தால் அன்றைய சந்தை விலை நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளிடமிருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்படும்.

## முல்லைப்பெரியாறு அணையில் மழை இல்லை முதல்போக விவசாயம் தள்ளிப்போகுமா?

உத்தமபாளையம், : பெரியாறு அணையில் மழை இல்லாத நிலையில் முதல்போக நெல்விவசாயம் தள்ளிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்மாவட்டங்களான தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் குடிநீர் ஆதாரமாகவும், விவசாயத்திற்கு பெரிதும் உதவக்கூடிய பெரியாறு அணையின் மொத்த நீர்மட்டம் 142 அடி. கடந்த நவம்பரில் இதன் முழு கொள்ளளவை எட்டியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம் அணையில் இருந்து 1,600 கனஅடி தண்ணீர்வரை தொடர்ந்து வெளியேற்றப்பட்டதால் அணையின் நீர்மட்டம் குறையதொடங்கி உள்ளது. தற்போதோ 110.80 அடி தண்ணீர்தான் உள்ளது.

கோடைக்காலம் தொடங்கும்முன்பே அதிர்ஷ்டவசமாக மழை பெய்வது வழக்கம். இந்நிலையில் நேற்று வரை பெரியாறு அணையில் மழை இல்லை. இதனால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அணைக்கு

விநாடிக்கு 75 கனஅடி தண்ணீர் வந்தது. அதே நேரத்தில் 75 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. வைகை அணையின் நீர்மட்டம் 31.9 கனஅடியாக உள்ளது. அணைக்கு தண்ணீர்வரத்து இல்லை. அணையில் இருந்து 60 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்வடையாக நிலையில் வழக்கமாக ஜூன் முதல்வாரத்தில் தண்ணீர் திறக்கப்படுவத இந்த வருடம் தள்ளிப்போகும் நிலையில் உள்ளது. இதனால் மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்துக்கிடக்கின்றனர். இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், ‘அணையில் மழை இல்லை. இதனால் நீர்மட்டம் உயரவில்லை. 114 அடிவரை உயர்ந்தால்தான் தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது. எனவே மழையை எதிர்பார்த்து உள்ளோம்’ என்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

**தமிழகத்தில் செலவில்லாத இயற்கை விவசாயத்தை நடைமுறைபடுத்த வேண்டும் உழவர் உழைப்பாளர் சங்க தலைவர் மணிகண்டன் பேட்டி**



பொங்கலூர்,

விவசாயிகளின் தற்கொலைகளை தடுக்க இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் வகுத்துக்கொடுத்துள்ள செலவில்லாத இயற்கை விவசாயத்தை முழுமையாக நடைமுறைபடுத்த வேண்டும் என்று உழவர் உழைப்பாளர் சங்கத்தலைவர் மணிகண்டன் நிருபர்களிடம் கூறினார்.

இதுகுறித்து உழவர் உழைப்பாளர் சங்கத்தின் மாநிலத்தலைவர் பொங்கலூர் மணிகண்டன் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:–

வரவேற்கிறோம்

தமிழக முதல்– அமைச்சர் பொறுப்பேற்றதும் சிறு, குறு விவசாயக்கடன் தள்ளுபடி, டாஸ்மாக் கடைகளின் நேரத்தை குறைப்பது, 500 மதுக்கடைகளை மூடுவது, பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்குவது போன்ற திட்டங்களில் முதல் கையெழுத்திட்டார். இதை நாங்கள் வரவேற்கிறோம். மது குடிப்பவர்களை மட்டும் பாதிக்கக்கக்கூடிய விஷயமாக இருப்பதால் அவர்களை பாதுகாக்க மதுவிலக்கு திட்டம் கொண்டு வரப்படுகிறது. ஆனால் அதைவிட நஞ்சில்லா உணவு, ரசாயனம் இல்லா மண் என்பதை உறுதி செய்து நோயில்லா சமுதாயத்தை அமைக்க முன் வரவேண்டும்.

அடுத்த 5 ஆண்டுகளில் சிக்கிம் மாநிலத்தை பின்பற்றி படிப்படியாக இயற்கை பூமியாக தமிழகத்தை மாற்ற ஒட்டு மொத்த மக்களையும் தயார்படுத்த வேண்டும். முதலில் ரசாயன உரங்களையும், பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் மரபணு மாற்று விதைகளையும் தடை செய்யவேண்டும். படிப்படியாக மதுவிலக்கு அமல்படுத்தப்பட உள்ளதால் மதுபட்டியலில் இருந்து இயற்கை பானமான கள் நீக்கப்பட வேண்டும். இதனால் தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதுடன், பனை மரங்கள் அழிவதையும் தடுக்கலாம்.

இயற்கை விவசாயம்

விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி, வட்டி தள்ளுபடி, மானியம், நிவாரணம், சலுகைகள் ஆகியன தற்காலிகமான தீர்வுதான். எனவே விவசாயிகள் மானத்தோடும், கவுரவத்தோடும் வாழ வழிவகுக்கும் வகையில் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் பரிந்துரையை அமல்படுத்தி விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யவேண்டும்.

விவசாயிகளின் தற்கொலைகளை தடுக்க இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் வகுத்துக்கொடுத்துள்ள செலவில்லாத இயற்கை விவசாயத்தை முழுமையாக நடைமுறைபடுத்தி இளைய தலைமுறை விவசாயிகளும் விவசாயத்தில் நம்பிக்கையோடு ஈடுபட செய்யவேண்டும். இயற்கை உரம் தயாரிக்கவும், நாட்டு மாடுகளை பாதுகாக்கவும், பாரம்பரிய விதைகளை மீட்டெடுக்கவும் நடவடிக்கை எடுத்தால் விவசாயிகளுக்கு எந்தவிதமான சலுகைகளும் வழங்க அவசியம்

இருக்காது. இதற்கு தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு பொங்கலூர் மணிகண்டன் தெரிவித்தார்.

## தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது

தஞ்சையில் இருந்து 1,200 டன் புழுங்கல்அரிசி விருதுநகருக்கு சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டங்களில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,200 டன் புழுங்கல்அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி, விளார், நாஞ்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன.

பின்னர் இந்த அரிசி மூட்டைகளை சரக்குரெயிலில் தொழிலாளர்கள் ஏற்றினர். மொத்தம் 21 வேகன் களில் 1,200 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து இந்த சரக்குரெயில் தஞ்சையில் இருந்து விருதுநகருக்குபுறப்பட்டு சென்றது.